## உதயசூரியன், நம் ரத்தத்திலும் உணர்விலும் கலந்து இருக்கக்கூடிய சின்னம்!

# ஏப்ரல் 23 ஆம் தேதி வாக்குப்பதிவு - மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை: ‘உதயசூரியன் வெற்றி பெற்றது’ என்பதை உறுதி செய்ய வேண்டும்!

## சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை, மார்ச் 17 –**

**சென்னை, டவுட்டனில் தூய பவுல் பள்ளி விளையாட்டு மைதானத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், “ஏப்ரல் 23–ஆம் தேதி வாக்குப்பதிவு, மே 4–ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை. வாக்கு எண்ணிக்கை எண்ணப்படுகின்ற அன்றைக்கு ஒவ்வொரு பூத்திலும் உதயசூரியன் வெற்றி பெற்றது, உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது, உதயசூரியன் உதித்துவிட்டது என்பதை உறுதி செய்ய வேண்டும். இந்த உதயசூரியன் என்பது ஏதோ நாம் சுவரில் எழுதி வைத்துவிட்டுப் போகின்ற சின்னம் கிடையாது. நம் இரத்தத்திலும் உணர்விலும் கலந்து இருக்கக்கூடிய சின்னம் உதயசூரியன்’’ என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு: –**

எல்லாரும் தயாராகிவிட்டீர்களா? அடுத்த 38 நாட்கள் நம்மில் யாருக்கும் ஓய்வு கிடையாது. அடுத்த 38 நாட்கள் நம் கண்களுக்குத் தெரிவதெல்லாம் ஒரே ஒரு இலக்குதான், அது இந்த கிழக்கு மாவட்டத்தின் அத்தனை சட்டமன்றத் தொகுதிகளையும் வெற்றிபெறச் செய்வது என்கிற ஒரே செய்தி மட்டும்தான் நம் இலக்கு. அதற்காகத்தான் இன்று இந்தக் கூட்டத்தை இவ்வளவு சிறப்பாக அண்ணன் சேகர்பாபு அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

### முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம்

இந்தக் கூட்டம் மிக மிக முக்கியமான ஒரு கூட்டம். சிறிது நேரத்துக்கு முன்புதான் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை இன்று சென்னை கிழக்கு மாவட்டத்திலிருந்து நான் தொடங்குகிறேன். தொடங்குகிறேன் என்றால், தனிப்பட்ட ஒரு உதயநிதியாக நான் தொடங்கவில்லை, இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை பேரும்... நீங்கள்தான் தொடங்கப் போகிறீர்கள். அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் உங்கள் எல்லாரையும் சந்திக்கிறேன்.

இங்கே தம்பி சூர்யா கிருஷ்ணமூர்த்தி சொன்னது போல, இது ஒரு தொடர் சுற்றுப் பயணம். கடந்த மூன்று நான்கு நாட்களில் மட்டும் ஆறு மாவட்டங்களில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சாலை வழியாகவே கிட்டத்தட்ட 1,800 கிலோமீட்டர் பயணித்து நேற்று நள்ளிரவுதான் நான் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். சென்னைக்கு வருகிறேன் என்றால் சேகர்பாபு அண்ணனுக்குத் தெரிந்துவிடும், எப்படியாவது கண்டுபிடித்து விடுவார். அவருக்கு எல்லா இடங்களிலும் ஆள் இருப்பார்கள். நான் வருவதை எப்படியோ தெரிந்துகொண்டு, ‘அண்ணே என் கிழக்கு மாவட்டத்துக்கு நீங்கள் வருகை தர வேண்டும்’ என்று சொன்னார். சேகர்பாபு அண்ணனுக்கு நான் என்றுமே ‘நோ’ சொன்னது கிடையாது. சேகர்பாபு அண்ணனும் எனக்கு எப்போதும் ‘நோ’ சொன்னதே கிடையாது, எப்போதுமே ‘எஸ்’ தான்.

### 24 மணி நேரமும் சுறுசுறுப்பு

முன்பெல்லாம் மாதத்துக்கு ஒரு முறை கூப்பிடுவார், பிறகு 10 நாட்களுக்கு ஒரு முறை கூப்பிட ஆரம்பித்தார், இப்போது நான் சென்னையில் இருந்தாலும் எப்படியோ கண்டுபிடித்து என்னை அழைத்து வந்துவிடுகிறார். இவ்வளவு ஆர்வத்தோடு நான் எதற்காக வருகிறேன் இங்கே, ஏன் என்ன காரணம்? அந்த அளவுக்கு அண்ணன் சேகர்பாபு அவர்கள் இந்த மாவட்டத்தைச் செயல்பாட்டுடன் வைத்திருக்கிறார்கள். நமக்கெல்லாம் சோர்வு வரும். ஆனால், சேகர்பாபு அண்ணன் சோர்வாகி நான் பார்த்ததே கிடையாது. 24 மணி நேரமும் சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவர்.

பொதுவாக சுறுசுறுப்புக்கு தேனீக்களை நாம் உதாரணமாகச் சொல்வோம், ஆனால், அந்தத் தேனீக்களையே தோற்கடிக்கக்கூடிய சுறுசுறுப்பு அண்ணன் சேகர்பாபு அவர்களின் சுறுசுறுப்பு. அந்த வகையில்தான் அண்ணன் அவர்கள் என்னை அழைக்கிறார்கள், அந்த உரிமையுடன் தான் நானும் ஒவ்வொரு முறையும் வந்து கொண்டிருக்கிறேன்.

### இந்த உற்சாகம், இந்த எழுச்சி...

நேற்று தலைவர் கொளத்தூர் தொகுதி நிர்வாகிகளைச் சந்தித்துவிட்டார், தலைவர் அவர்கள் ஆலோசனை சொல்லிவிட்டார். இன்று அந்த வகையில், அம்பத்தூர், துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம், திரு.வி.க நகர் என ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கான நிர்வாகிகள் சந்திப்பை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்று உங்களிடம் இருக்கக்கூடிய இந்த உற்சாகம், இந்த எழுச்சி தேர்தல் முடிகின்ற கடைசி நாள் வரைக்கும், நாம் தேர்தல் முடிவைக் கையில் பெறும் வரைக்கும் இதே உணர்ச்சியுடன், ஆற்றலுடன் களத்தில் நீங்கள் இருக்க வேண்டும். உழைப்பாலேயே எதிராளிகளைப் பயமுறுத்தக் கூடியவர்கள் உடன்பிறப்புகள் என்பதை நாம் மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நான் ஏதோ புதிதாக உங்களுக்கு ஆலோசனை சொல்லப் போவதில்லை, உங்களுக்குத் தெரியாததும் கிடையாது. நீங்கள்தான் எனக்கு ஆலோசனை சொல்ல வேண்டும். ஏனெனில், நான் தமிழ்நாடு முழுவதும் நாளையிலிருந்து கிளம்பிவிடுவேன். உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்காகத்தான் நான் இன்று வந்திருக்கிறேன்.

### இந்தியாவிலேயே ஒரே முதலமைச்சர்

சென்ற முறை ஆறுக்கு ஆறு சிக்சர் அடித்தீர்கள், இந்த முறை மீண்டும் அடுத்த பந்திலும் சிக்சர் அடித்துக் காட்ட வேண்டும். அந்த நம்பிக்கையுடன் உங்களின் வாழ்த்துகளைப் பெற்று தலைவரிடம் சொல்லிவிட்டு போவேன்; ஆறுக்கு ஆறு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள், நிச்சயம் ஜெயித்துக்






காட்டுவார்கள், என்றைக்குச் சொன்னாலும் செய்துகாட்டுகிற மாவட்டம், கிழக்கு மாவட்டம். சொல்வதைவிடச் சிறப்பாகச் செய்துகாட்டுகிற மாவட்டம் கிழக்கு மாவட்டம். ஆனால் மிகை நம்பிக்கை (OVERCONFIDENCE) என்று எடுத்துக்கொள்ளக் கூடாது, அதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் ஏன் இவ்வளவு நம்பிக்கையாக இருக்கிறோம், ஏன் தெரியுமா? ஒரே ஒருவர்தான் அதற்கு காரணம், முதலமைச்சர் அவர்கள் தான், நம் தலைவர் அவர்கள்தான் அதற்கு காரணம். இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சர் ஒவ்வொரு நாளும் பொதுமக்களை நேருக்கு நேர் தினமும் சந்திக்கக் கூடிய ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்தான். தினமும் ஏதாவது நிகழ்ச்சி மூலம், தினமும் மக்களைச் சந்திக்கிறார், தினமும் மாநிலம் முழுவதும் பயணம் செய்கிறார், அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார், இந்த ஐந்து வருட திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லா குடும்பத்திலும், எல்லா வீட்டிலும் நிச்சயம் நம் அரசின் உதவித் திட்டங்களைப் பெற்ற யாராவது ஒருவர் நிச்சயமாக இருப்பார்கள். அந்த அளவுக்குத் திட்டங்களை நாம் செய்திருக்கிறோம். சில திட்டங்களை மட்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### விடியல் பயணத் திட்டம்

2021-ஆம் ஆண்டு முதலமைச்சர் ஆன உடனே நம் தலைவர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். ஒவ்வொரு மகளிரும் குறைந்தது 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் ஒவ்வொரு மாதமும் சேமித்திருக்கிறார்கள். இந்த ஐந்து வருடத்தில் 920 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

குழந்தைகள் காலையில் பள்ளிக்கூடத்துக்குப் பசியுடன் போகக்கூடாது, காலையில் சென்றால், முதலில் தரமான காலை உணவு அதன் பிறகு தரமான கல்வி என்பதற்காக நம் முதலமைச்சர் அறிமுகப்படுத்திய திட்டம்தான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். இது தேர்தல் அறிக்கையில் நாம் சொல்லாத திட்டம். இன்று ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறுகிறார்கள்.

ஜி.இ.ஆர் (GER) என்று சொல்வார்கள். பள்ளிக்கூடம் முடித்து கல்லூரிக்கு சேருகின்ற மாணவர்களின் சதவிகிதம். ஒட்டுமொத்த இந்தியாவின் சராசரி எவ்வளவு தெரியுமா? 28 சதவிகிதம். ஆனால், இந்தியாவிலேயே முதலிடம் நமது தமிழ்நாடு தான். இன்று நமது தமிழ்நாடு 50 சதவிதம்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு வரவழைத்துவிட்டோம், அடுத்து, கல்லூரிக்குச் சேர வேண்டுமே அதை ஊக்கப்படுத்துவதற்கு தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம். கல்வி ஊக்கத்தொகை மாதம் 1,000 ரூபாய் இன்று 12 லட்சம் மாணவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசுப் பள்ளியில் படித்தால் போதும், எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகையை நம் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

இன்று இந்த வருடம் 10 லட்சம் மாணவ மாணவிகளுக்குப் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மடிக்கணினியை நம் அரசு வழங்கிட கொடுத்து முடித்துவிட்டோம். ‘அன்பு கரங்கள்’ என்று ஒரு திட்டம். பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் படிப்புக்குத் துணை நிற்கின்ற வகையில், 12-ஆம் வகுப்பு வரைக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் 2,000 ரூபாய் அந்தக் குழந்தையின் வங்கிக் கணக்கில் நம் முதலமைச்சர் வழங்குகிறார். 12,000 குழந்தைகள் இன்று இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இந்தியாவிலேயே எனக்குத் தெரிந்தவரை எந்த மாநிலத்திலும் கிடையாது. இது தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம்.

### 300 வீரர்களுக்கு அரசு வேலை

வரலாற்றிலேயே இல்லாத வகையில் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு இட ஒதுக்கீடு மூலமாக 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்திருக்கிறோம். அ.தி.மு.க-வின் பத்து ஆண்டுகால ஆட்சியில் 2 பேருக்கு மட்டும்தான் வேலைவாய்ப்பு கொடுத்திருந்தார்கள்.

ஒவ்வொரு துறையாகப் பார்த்துப் பார்த்து நம் முதலமைச்சர் செய்திருக்கிறார்கள், நம் அரசு செய்திருக்கிறது. இவை அனைத்துக்கும் மகுடம் வைத்தாற்போல ஒரு திட்டம், அது தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம், அதுதான் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. கடந்த மூன்று வருடமாக வழங்கிக் கொண்டு வருகிறோம். ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் தலைவர் கொடுத்திருக்கிறார்.

சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி இந்தத் திட்டத்தை எப்படியாவது இதை நிறுத்த வேண்டும் என்று ஒரு கும்பல் நீதிமன்றம் வரைக்கும் சென்றிருக்கிறார்கள். சில மாநிலங்களில் நிறுத்தியிருக்கிறார்கள், நீதிமன்றத்துக்குச் சென்று இடைக்காலத் தடை வாங்கியிருக்கிறார்கள். ஆனால், நம் முதலமைச்சர் என்ன சொன்னார்? நான் 1,000 ரூபாய் கொடுப்பதை நிறுத்தப் பார்க்கிறாயா? இதோ நான் கொடுக்கிறேன் 5,000 ரூபாய், நிறுத்திப் பார், பார்க்கலாம் என்று மூன்று மாதம் சேர்த்து 3,000-மும், கோடைக்காலச் சிறப்பு நிதியாக 2,000-மும் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார்.

### 2,000 ரூபாயாக உயர்வு

இன்னொரு வாக்குறுதியை நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். இப்போது மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய், மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே அந்த 1,000 ரூபாயை 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியையும் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். இது மட்டுமன்றி, மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள், முதியவர்கள், மூத்த குடிமக்கள் 38 லட்சம் பேருக்கு 2,000 ரூபாய் சிறப்பு நிதியும் நம் அரசு இந்த மாதம் கொடுத்திருக்கிறது.

‘தாயுமானவர் திட்டம்’ திட்டம். எனக்குத் தெரிந்து இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது. இந்தத் திட்டத்தின் நோக்கம் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்கான ரேஷன் பொருட்களை அவர்கள் வரிசையில் நின்று வாங்கத் தேவையில்லை, அவர்கள் வீட்டிற்கே நம் அரசு இன்று கொண்டு போய் சேர்த்துக்கொண்டு இருக்கிறது.

இப்படி குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை ஒவ்வொரு திட்டத்தையும் நம் திராவிட மாடல் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, இந்த வடசென்னை வளர்ச்சித் திட்டத்துக்காக 8,000 கோடி ரூபாய் அளவிற்குப் பல்வேறு பணிகளை நமது அரசு செய்திருக்கிறது.

### வடசென்னை வளர்ச்சித் திட்டம்

சாலை, பேருந்து நிலையம், பூங்கா, உடற்பயிற்சிக் கூடம், மருத்துவமனை, திருமண மண்டபம், மின்சார வசதி, விளையாட்டரங்கம் இப்படிப் பல்வேறு கட்டமைப்புகளை இந்த வடசென்னை வளர்ச்சித் திட்டத்தில் நம் அரசு இன்று செய்து கொடுத்திருக்கிறது. அதனால்தான் இன்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக வளர்ந்து வருகின்ற மாநிலங்களில், 11.19% இரட்டை இலக்க வளர்ச்சியுடன் இன்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக நமது தமிழ்நாடு இடம் பிடித்திருக்கிறது. ஆனால் ஒன்றிய அரசு பார்க்கிறது, நமது தமிழ்நாட்டிற்கு எதுவுமே தருவதில்லை. இருந்தாலும் தமிழ்நாடு எப்படி இவ்வளவு சாதிக்கிறது? நாம் கேட்கின்ற நிதியைக் கொடுப்பதில்லை. நமக்கு வரவேண்டிய நிதியைத் தடுத்து நிறுத்துகிறார்கள். கல்வி உரிமையைப் பறிக்கிறார்கள்.

புதிய கல்விக் கொள்கையை சென்ற ஆண்டு கொண்டு வந்தார்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்டன. நம் முதலமைச்சர் சொல்லிவிட்டார், 3,200 கோடி இல்லை, 10,000 கோடி கொடுத்தாலும் புதிய கல்விக் கொள்கையை நான் தமிழ்நாட்டுக்குள் விட மாட்டேன் என்று சொன்ன ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்தான்.

இன்று புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்ட பல முதலமைச்சர்கள் இப்போது யோசிக்கிறார்கள். அப்போதே தமிழ்நாட்டு முதலமைச்சர் சொன்னது சரி என்று. இப்போது புதிய கல்விக் கொள்கையைச் சில மாநிலங்கள் எதிர்க்கவும் ஆரம்பித்திருக்கின்றன. இப்படி எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய முதலமைச்சர் நம் முதலமைச்சர்தான்.

### பா.ஜ.க.வின் சார்பு அணிகள்

இன்று ஈ.டி, சி.பி.ஐ, வருமான வரிச் சோதனை, தேர்தல் ஆணையம் என்று பா.ஜ.க.வின் சார்பு அணிகள் பல. அவர்களுடன் சேர்ந்து இன்று தேர்தல் வேலையை பா.ஜ.க. ஆரம்பித்திருக்கிறது. இப்போது அமைத்திருக்கக்கூடிய நம் எதிர்த்தரப்புக் கூட்டணியே, ஈ.டி, சி.பி.ஐ-யை வைத்து மிரட்டி உருவாக்கிய ஒரு கட்டாய கூட்டணிதான் இன்று அ.தி.மு.க அமைத்திருக்கும் கூட்டணி.

தேர்தல் தேதியை அறிவித்துவிட்டார்கள். ஏற்கனவே இரண்டு முறை வந்துவிட்டார் மோடி. இப்போது தேர்தல் தேதியை அறிவித்தவுடன் பாருங்கள் வாரத்துக்கு ஒரு முறை நிச்சயம் வந்துவிடுவார். மோடி வருவார், நிதி வராது. மோடி மட்டும் வருவார், தமிழ்நாட்டுக்கான எந்தத் திட்டமும் வராது. 15 நாட்களுக்கு முன்பு ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் மதுரைக்கு வந்தார். அந்தக் கூட்டத்தின் முகப்பில் முதலில் தந்தை பெரியாரின் புகைப்படம் வைத்திருந்தார்கள். ஆனால் மோடி வருகிறார் என்று தெரிந்தவுடன், அவர் கோபித்துக் கொள்வார் என்று தந்தை பெரியாரின் புகைப்படத்தை அ.தி.மு.க எடுத்துவிட்டது. பெரியாரின் புகைப்படத்தை எடுத்துவிட்டு அங்கே நரேந்திர மோடியின் புகைப்படத்தை வைத்தது அ.தி.மு.க. மதுரையில் எடுக்கப்பட்டது பெரியாரின் புகைப்படம். நான்கு நாட்களுக்கு முன்பு திருச்சியில் நடந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி புகைப்படத்தையே எடுத்துவிட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறது இன்று அ.தி.மு.க.

### முரட்டுத்தனமான ஓர் அடிமை

நிச்சயம் தேர்தல் முடிந்தவுடனே அ.தி.மு.க-வில் இருக்கக்கூடிய அண்ணா பெயரையும் எடுத்துவிட்டு அங்கே அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகம் என்று வைத்தாலும் வைத்துவிடுவார்கள். அ.தி.மு.க கொடியில் இருக்கக்கூடிய அண்ணாவின் புகைப்படத்தை எடுத்துவிட்டு, அங்கே அமித்ஷாவின் புகைப்படமும் மோடியின் புகைப்படமும் வைத்தாலும் வைத்துவிடுவார்கள். இதுதான் இன்று அ.தி.மு.க-வின் நிலைமை. நாம் அரசியலில் முரட்டுப் பக்தர்கள், முரட்டுத் தொண்டர்கள் எல்லாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இன்று இந்தியாவிலேயே ஒரு முரட்டுத்தனமான ஓர் அடிமையாக எடப்பாடி பழனிசாமி அவர்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ‘ஜாடிக்கு ஏத்த மூடி’ என்று சொல்வார்கள், அதுபோல இன்று மோடிக்கு ஏற்ற அடிமை எடப்பாடி பழனிசாமி அமைந்திருக்கிறார்.

நாம் அவசரமாக எங்காவது வெளியே போக வேண்டும் என்றால், நமது வீட்டில் கார் இல்லை, பைக் இல்லை என்றால் என்ன செய்வோம்? ராபிடோவில் பதிவு செய்வோம், ஓலாவில் பதிவு செய்து வரச் சொல்லி, அவசரமாகப் போக வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போய்விடுவோம். அதேபோல் இன்று பா.ஜ.க அ.தி.மு.க-வை முன்பதிவு செய்து வைத்துத் தங்களின் அவசரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

உதாரணமாக பீகாரை எடுத்துக்கொள்ளுங்கள். பீகாரில் என்ன நடந்து கொண்டிருக்கிறது? அங்கே சட்டமன்றத் தேர்தலில் வென்றது நிதிஷ்குமார் அவர்கள். முதலமைச்சர் ஆகிவிட்டார். சில மாதங்கள்தான் ஆயின. இன்று அவரை ஓரங்கட்டிவிட்டு இன்று பீகாரை பா.ஜ.க கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டது. அவரை எம்.பி ஆக்கிவிட்டார்கள். நிதிஷ்குமார் அவர்கள் பத்து முறை முதலமைச்சர் ஆனவர். பத்து முறை முதலமைச்சர் ஆன நிதிஷ்குமார் அவர்களுக்கே இந்த நிலைமை என்றால், இந்த எடப்பாடி பழனிசாமி எல்லாம் ஊர்ந்து போய் முதலமைச்சர் ஆனவர். இவர்களை எல்லாம் ஊதித் தள்ளிவிட்டுப் சென்றுவிடுவார்கள். தேர்தலுக்கு பிறகு பாருங்கள், அவ்வளவு தான் உன் நிலைமை என்று அ.தி.மு.க-வைப் பா.ஜ.க. விழுங்கித் துப்பிவிடும்.

‘பாதம் தாங்கி’ பழனிசாமிக்கெல்லாம் மோடி அவர்களை எதிர்த்து நிற்பதற்கான அந்த தைரியம் கிடையாது. இன்று இந்தியாவிலேயே பா.ஜ.க.வை எதிர்த்து கேள்வி கேட்கக்கூடிய ஒரே தலைவர் நம் தலைவர் அவர்கள்தான். அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணியில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கட்சியும், ஒவ்வொரு தலைவரும் என்ன பேசுகிறார் என்பதைச் கொஞ்சம் பின்னோக்கி நாம் யோசித்துப் பார்ப்போம். “பா.ஜ.க-வை நாங்கள் இனிமேல் நிச்சயம் சுமக்க மாட்டோம். 2026 இல்லை, 2036-ல் கூட நாங்கள் பா.ஜ.க-வுடன் கூட்டணி வைக்க மாட்டோம்” என்று சொன்ன கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. “எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு ஒரு கவுன்சிலர் ஆகவாவது தகுதி கிடையாது’’ என்று சொன்ன ஒரே தலைவர் அன்புமணி. “எடப்பாடி பழனிசாமியோடு கூட்டணி வைப்பது தூக்கில் தொங்குவதற்குச் சமம்” என்று சொன்ன தலைவர் டி.டி.வி. இதையெல்லாம் நான் சொல்லவில்லை, இதையெல்லாம் நாம் சொல்லவில்லை, இதையெல்லாம் சொன்னவர்கள் இன்று ஒன்றாகச் சேர்ந்து நம்மை விமர்சனம் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அடிமைகளையும் அவர்களின் உரிமையாளர்களையும் பாசிஸ்டுகளையும் நாம் ஓட ஓட விரட்ட வேண்டும். விரட்டியடிக்க வேண்டிய நேரம் வருகின்ற சட்டமன்றத் தேர்தல்.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், நிர்வாகிகளாகிய நாம் அடுத்த 38 நாட்கள் மக்களை நேரடியாகச் சந்திப்போம். நம்மிடம் சொல்வதற்கு நம் சாதனைகள் இருக்கின்றன, வரலாறு இருக்கிறது, தி.மு.க-வின் வரலாறு இருக்கிறது, திராவிட மாடல் அரசின் திட்டங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் மக்களைச் சந்தித்துச் சொல்லுங்கள். ஒவ்வொருவரும் ஓர் இலக்கு வைத்துக்கொள்ளுங்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் குறைந்தது 50-லிருந்து 60 பேரை நேரில் சந்தித்துப் பேசுங்கள். நீங்கள் ஒருவர் சொன்னால் உங்களின் செல்வாக்கில், உங்கள் கட்டுப்பாட்டில் ஒரு 50 பேர் 50 வாக்காளர்களாக மாறுவார்கள் என்றால், உங்களுக்கு அந்தத் தகுதி இருந்தது என்றால் உங்களின் வளர்ச்சியை கழகத்தில் யாரும் தவிர்க்கவோ தடை செய்யவோ முடியாது.

### பெரிய அளவில் நமக்கு ஆதரவு அலை

பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்ஸ், பி.எல்.ஏ-2, பூத் கமிட்டி உறுப்பினர்கள் எல்லோரும் திட்டமிட்டு உங்களின் பணிகளை நீங்களே பிரித்துக்கொள்ளுங்கள். நான் கடந்த ஒரு வாரமாகவே தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தில் இருக்கிறேன். மக்களை தினமும் சந்திக்கிறேன். குறிப்பாக, மகளிரைத் தினமும் சந்திக்கிறேன். நான் சொல்கிறேன், மிகப் பெரிய அளவில் நமக்கு ஆதரவாக, நம் தலைவருக்கு ஆதரவான ஓர் அலை இன்று தமிழ்நாட்டில் இருக்கிறது. நம் கழக மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிச்சயம் ஜெயிக்கப்போவது உறுதி. ஆனால், அந்த வெற்றி சாதாரணமான வெற்றியாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு தொகுதியிலும் கடந்த தேர்தலை விட அதிக அளவு வித்தியாசத்தில் நாம் ஜெயித்துக் காட்ட வேண்டும். உங்கள் பூத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு முறைக்குப் பல முறை சென்று அவர்களைச் சந்தித்து, வாக்குக் கேளுங்கள். நிர்வாகிகள் மக்களிடம் பேசும்போது. மிகுந்த கவனத்தோடு பேசுங்கள்.

அடுத்த ஒரு மாதம் நம் கண்களுக்கு வெற்றி மட்டும்தான் தெரிய வேண்டும். யார் பூத்தில், யார் அதிக வாக்கு வாங்கித் தரப்போகிறீர்கள் என்று நமக்குள்ளே ஒரு போட்டி இருக்க வேண்டும். நான் இந்த வீடுகளுக்குப் பொறுப்பு, இந்தக் குடும்பத்துக்கு நான் பொறுப்பு, இந்தத் தெருவுக்கு நாங்கள் இரண்டு பேர் பொறுப்பு என்று உங்களுக்குள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். திட்டமிட்டு வியூகம் அமைத்துப் பணியாற்றினால் நிச்சயம் வெற்றி உறுதி.

“தி.மு.க.காரன் என்றால் சிங்கிள் டீயை மட்டும் குடித்துவிட்டு, சாப்பிடாமல் இரவும் பகலுமாக வேலை பார்ப்பான்” என்று மற்ற இயக்கத்தினர் எல்லாம் சொல்வார்கள். அதை நாம் இன்று நிரூபித்துக்காட்ட வேண்டிய நேரத்தில் இருக்கிறோம். நாம் நிரூபிக்கவேண்டிய இடத்தில் இருக்கிறோம். நம் தலைவர் சொல்வது மாதிரி என்றைக்குமே தமிழ்நாடு டெல்லிக்கு அவுட் ஆப் கன்ட்ரோல்தான் என்பதை நாம் மீண்டும் நிரூபித்துக் காட்டுவோம்.

### தமிழ்நாடு Vs டெல்லி தேர்தல்

இந்தத் தேர்தல் தமிழ்நாடு Vs டெல்லி தேர்தல்தான் என்பதை நாம் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும். தலைவர் நமக்கு ‘வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’ என்று ஓர் இலக்கு கொடுத்திருக்கிறார்கள். நான் சொல்கிறேன் அடுத்த 38 நாட்கள் நாம் களத்தில் இறங்கிச் சரியாக வேலை பார்த்தோம் என்றால், 200 இல்லை 234 தொகுதிகளிலும் நிச்சயம் வெற்றி பெறுவோம். அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வெற்றி கிழக்கு மாவட்டத்திலிருந்து தொடக்க எண்ணிக்கை தொடங்க வேண்டும்.

எப்படி, சென்ற தேர்தலில் ஆறு பந்தில் ஆறு சிக்ஸர் அடித்தீர்களோ அதே மாதிரி இந்த முறையும் அந்தச் சிக்ஸரை அடித்துக் காட்ட வேண்டும். மீண்டும் செய்துகாட்ட வேண்டும். அடுத்த 38 நாட்கள் நாம் செய்கின்ற வேலை அடுத்த ஐந்து வருடம் தமிழ்நாட்டை யார் ஆளப்போகிறார்கள் என்பதைத் தீர்மானிக்கும்.

கழகத் தலைவர் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்கப்போவது நிச்சயம். நம் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கப்போவது நிச்சயம். அதற்கு உடன்பிறப்புகள் நீங்கள், நிர்வாகிகள் உங்களின் செயல்பாடு, உங்களின் பிரச்சாரம் அதற்கு நிச்சயம் துணை நிற்கும். அதை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு அயராது உழைப்போம்.

### உதயசூரியன் வெற்றி

ஏப்ரல் 23-ஆம் தேதி வாக்குப்பதிவு, மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை. வாக்கு எண்ணிக்கை எண்ணப்படுகின்ற அன்றைக்கு ஒவ்வொரு பூத்திலும் உதயசூரியன் வெற்றி பெற்றது, உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது, உதயசூரியன் உதித்துவிட்டது என்பதை உறுதி செய்ய வேண்டும். இந்த உதயசூரியன் என்பது ஏதோ நாம் சுவரில் எழுதி வைத்துவிட்டுப் போகின்ற சின்னம் கிடையாது. நம் இரத்தத்திலும் உணர்விலும் கலந்து இருக்கக்கூடிய சின்னம் உதயசூரியன். பேரறிஞர் அண்ணா நம்மிடம் கொடுத்துவிட்டுச் சென்ற சின்னம் உதயசூரியன். கலைஞர் கட்டிக்காத்த சின்னம் உதயசூரியன். நம் தலைவருக்கு வெற்றியை மட்டுமே கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய சின்னம் உதயசூரியன். அந்த உதயசூரியனை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு நம் தேர்தல் பணிகளைச் செய்வோம் என்று கூறிக்கொண்டு, தேர்தல் பிரச்சாரத்தின்போது மீண்டும் நிச்சயமாக அண்ணன் சேகர்பாபு உங்களிடம் என்னை அழைத்து வருவார். அப்போது இதைவிட இன்னும் எழுச்சியுடன் வெற்றி நிச்சயம் உறுதியாகிவிட்டது என்கிற செய்தியை நீங்கள் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாநகராட்சி மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பரந்தாமன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, ஷேக் அப்துல்லா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி, உமாகாந்த், பரிதி இளம்சுருதி, தொகுதிப் பார்வையாளர்கள் நரேந்திரன், நாகலிங்கம், கிருஷ்ணமூர்த்தி, முனியாண்டி, மருத்துவர் யாழினி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், விஜயகுமார், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகாம்பரம், மகாதேவன், புனிதவதி எத்திராசன், ஆசாத், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எஃப். முரளி, நாகராஜன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜன், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, ராஜசேகர், முரளி, வாசு, முரளி, சுதாகர், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் சாந்தகுமாரி, மண்டலக் குழு தலைவர்கள் ஸ்ரீராமலு, கூ.பி. ஜெயின், மணி, நிர்மலா, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், வட்டக் கழகச் செயலாளர்கள் பாபு, விஜயகுமார், கழகத்தின் இளம் பேச்சாளர் கீர்த்தனா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், ஜெகதீஷ், வினோத், தனசேகர் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.